**செ. கு. எண்**:459 **நாள்**:24.12.12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 24.12.2012

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், டி.கொத்தனூர் தரப்பு, நார்த்தனம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. பாப்பையன் என்பவரின் மகன் முனுசாமி 23.12.2012 அன்று ஓசூர் வட்டம், பார்த்தகோட்டா கிராமம் அருகே காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், எட்டிமடை கிராமத்தைச் சேர்ந்த திரு. நடராஜ் என்பவரின் மனைவி ராமாத்தாள் 23.12.2012 அன்று சொரிமலை காப்புக் காடு அருகே காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானைகள் தாக்கியதில் அகால மரணமடைந்த முனுசாமி மற்றும் ராமாத்தாள் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களின் காலமான முனுசாமி மற்றும் ராமாத்தாள் ஆகியோரின் குடும்பங்களுக்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**